வணக்கம்

ஆகாஷ்வாணி – புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 24-08-2026 நேரம் : மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியின் பொருளாதாரம், வலுவான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், இன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் கூறினார்.

புதுச்சேரியில், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியுடன், கோதுமை மாவு, துவரம் பருப்பு உள்ளிட்ட பொருட்கள் தொகுப்பாக வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பட்ஜெட் உரையில் அறிவித்தார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஆந்திர மாநிலத்தில் முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட, உயர்ரக பாப்கார்ன் சோள விதைகளை அறிமுகப்படுத்தினார்.

இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, கேலோ இண்டியா சம்வாத் – விவாத நிகழ்ச்சி, வரும் 27ஆம் தேதி, தேசிய அளவில் நடைபெற உள்ளது.

---

## சட்டமன்றம் ஆளுநர் 1 (18)

16ஆவது புதுச்சேரி சட்டமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர், துணை நிலை ஆளுநர் உரையுடன் இன்று தொடங்கியது. புதுச்சேரியின் பொருளாதாரம், வலுவான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், சட்டமன்ற உரையில் கூறினார். 2020-21ஆம் ஆண்டில், மைனஸ் 2.21 சதவிகிதமாக இருந்த புதுச்சேரியின் வளர்ச்சி, கடந்த நிதியாண்டில், 8.12 சதவிகிதமாக அதிகரித்து இருப்பதாகவும், கடந்த நிதியாண்டில், ஆண்டுக்கு 3 லட்சத்து 23 ஆயிரத்து 745 ரூபாயாக இருந்த தனிநபர் வருமானம், நடப்பு நிதியாண்டில், 3 லட்சத்து 44 ஆயிரத்து 926 ரூபாயாக உயர்ந்து இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். புதுச்சேரி அரசின் மொத்த வருவாய், கடந்த நிதியாண்டில், 13 ஆயிரத்து 397 கோடி

ரூபாயாக அதிகரித்து இருப்பதாகவும், அதற்கு முந்தைய நிதியாண்டில் இது, 12 ஆயிரத்து 346 கோடி ரூபாயாக இருந்ததாகவும் அவர் கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய மாநிலமாக புதுச்சேரியை மேம்படுத்தும் வகையில், பொருளாதார வளர்ச்சி, உள்கட்டமைப்பு மேம்பாடு, வேலை வாய்ப்பு பெருக்கம், டிஜிட்டல் ஆளுகை, சமூக பாதுகாப்பு, மற்றும், பருவநிலைக்கு ஏற்ற நெகிழ்வுத் தன்மைக்கு, அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக, அவர் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

## சட்டமன்றம் ஆளுநர் 2 (19)

(வாய்ஸ்)

புதுச்சேரியில், 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில், விமான நிலைய விரிவாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் என, சட்டமன்ற உரையில் துணை நிலை ஆளுநர் அறிவித்தார். இத்திட்டத்தின் கீழ், ஓடுபாதையின் நீளம், 2 ஆயிரத்து 300 மீட்டராக அதிகரிக்கப்படும் என்றும், பெரிய விமானங்கள் வந்து செல்ல ஏதுவாக, புதிய பயணிகள் முனையம் மற்றும் இதர வசதிகள் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார். உழவர்கரை-தட்டாஞ்சாவடியில், 725 கோடி ரூபாய் மதிப்பில், சிறப்பு ஐடி பொருளாதார மண்டலமும், 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பில், பல்நோக்கு சிறப்பு பொருளாதார மண்டலமும் அமைக்கப்பட உள்ளதாக, திரு. கைலாஷ்நாதன் தெரிவித்தார். இதன்மூலம் அடுத்த10 ஆண்டுகளில், ஆயிரக்கணக்கிலான வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். குடிநீர் திட்டங்களுக்கு 4 ஆயிரத்து 750 கோடி ரூபாய், கடலோரப் பாதுகாப்பிற்கு, ஆயிரத்து 433 கோடி ரூபாய், உயர்மட்ட சாலை, மற்றும், தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளுக்கு, ஆயிரத்து 500 கோடி ரூபாய் உட்பட பல்வேறு அறிவிப்புகளையும், சட்டமன்ற உரையில் துணை நிலை ஆளுநர் வெளியிட்டார். 128.48 கோடி ரூபாய் மதிப்பில், பிரதமரின் ஏக்தா மால், 34.35 கோடி ரூபாய் மதிப்பில், பாண்லே ஐஸ்கிரீம் ஆலை உள்ளிட்ட திட்டங்களும், துணை நிலை ஆளுநர் உரையில் இடம்பெற்றன.

---------------------

## ரங்கசாமி-பட்ஜெட் 1 (7)

புதுச்சேரியில், மக்களின் ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்தும் வகையில், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியின் அளவை மாற்றி, அரிசியுடன், கோதுமை மாவு, துவரம் பருப்பு, கேழ்வரகு, சர்க்கரை, நெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை தொகுப்பாக வழங்க, அரசு உத்தேசித்துள்ளது. இன்று சட்டமன்றத்தில், நடப்பு நிதியாண்டிற்கான அரசின் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசுகையில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி இதை அறிவித்தார். பட்ஜெட் குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

## ரங்கசாமி-பட்ஜெட் 2 (16)

(வாய்ஸ்)

புதுச்சேரி சட்டமன்றத்தில், இன்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தாக்கல் செய்த 14 ஆயிரத்து 300 கோடி ரூபாய் பட்ஜெட்டில், புதுச்சேரியில் பிறக்கும் குழந்தைகளுக்கு, தலா 3 ஆயிரம் ரூபாய் மதிப்பில் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது. அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், பேருந்து வசதி வழங்கப்படும் என முதலமைச்சர் பட்ஜெட் உரையில் தெரிவித்தார். இளைஞர்களின் வேலை வாயப்புத் திறனை மேம்படுத்தும் வகையில், 150 இளைஞர்களுக்கு, மாதம் 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையுடன், 12 மாத காலம் டிஜிட்டல் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். பாண்லே மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு, அதன் தரத்தை பொருத்து, லிட்டருக்கு 41 ரூபாய் வரை, விலை வழங்கப்படும் என்றும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள, பாரம்பரிய மீனவர்களுக்கான மத்திய அரசின் 3 ஆயிரம் ரூபாய் வாழ்வாதார உதவித் திட்டம், மாநில அரசு நிதி மூலம் , அனைத்து மீனவர்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும், நடப்பு நிதியாண்டிற்கான புதுச்சேரி அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------

## அன்பழகன் (8)

புதுச்சேரி சட்டமன்றத்தின் கூட்டத் தொடரை வரும் 31ஆம் தேதி வரை நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாக, சபாநாயகர் திரு. அன்பழகன் தெரிவித்துள்ளார். இன்று அலுவல் ஆலோசனைக் குழுவின்

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சட்டமன்றத்தில், அரசு ஊழியர்களின் சம்பளம், மற்றும், ஓய்வூதியம் குறித்து, மசோதா தாக்கல் செய்யப்படும் என்றும் கூறினார். கேள்வி-பதில் நேரத்திற்காக, பிற்பாடு சட்டமன்றம் மீண்டும் கூட்டப்படும் என்றும், இதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் திரு. அன்பழகன் தெரிவித்தார்.

---------------------

## ராதாகிருஷ்ணன் (12)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஆந்திர மாநிலம் ஏலூரு மாவட்டத்தில், மரபணு மாற்றம் அல்லாத முறையில், முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட, உயர்ரக பாப்கார்ன் சோள விதைகளை அறிமுகப்படுத்தினார். கூமெட் பாப்கார்னிக்கா நிறுவனத்துடன் இணைந்து, உயர்ரக பாப்கார்ன் சோள உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை அவர் பாராட்டி கவுரவித்தார். இத்தகைய புதிய மாற்றங்கள், வலுவான சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதற்கான விதையாக அமையும் என்று அவர் தமது உரையில் கூறினார். இந்தியா பொருளாதாரத்தின் முதுகெலும்பே விவசாயிகள்தான் என்றும், புதுமையான நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில், விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்ற வேண்டியது மிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

---------------------

## கேலோ இண்டியா (16)

தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, **கேலோ இண்டியா சம்வாத்** – விவாத நிகழ்ச்சி, வரும் 27ஆம் தேதி, தேசிய அளவில் நடைபெற உள்ளது. நாட்டின் ஆயிரத்து 500 இடங்களில் இருந்து, இளைஞர்கள், விளையாட்டு வீரர்கள், மற்றும், கல்வி நிறுவனங்கள் பங்கேற்க உள்ள இந்நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி மெய்நிகர் முறையில் கலந்து கொண்டு உரையாற்ற இருக்கிறார். விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ள இளைஞர்களுக்கும், கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையே, நேரடி ஆலோசனைகளுக்கு வாய்ப்பளிக்கும் மேடையாக இந்நிகழ்ச்சி அமைய உள்ளது. இந்நிகழ்ச்சியில் வெளியாகும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள், நாட்டின் விளையாட்டுச் சூழலை மேலும்

வலுப்படுத்தவும், 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்கு, விளையாட்டு வீரர்களை தயார்படுத்தவும், அரசு நிர்வாகத்தில், இளையோர் பங்கேற்பை ஊக்குவிக்கவும் உதவிகரமாக இந்நிகழ்ச்சி அமையும் என, அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---------------------

## யுபிஐ (11)

இந்தியாவின் யுபிஐ-டிஜிட்டல் பணப்பரிமாற்ற வசதி, இன்றுடன் 10 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ளது. 2016ஆம் ஆண்டு 25ஆம் தேதி தொடக்கப்பட்ட இந்த வசதி மூலம், கடந்த நிதியாண்டில் மட்டும், மொத்தம் 314 கோடி ரூபாய் மதிப்பில், 24 ஆயிரத்து 162 கோடி பணப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தியாவில், மக்களின் பணப் பரிமாற்ற பழக்கத்தில், புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள இந்த வசதி, தற்போது, எல்லைகளின் குறுக்கே செயல்படும் டிஜிட்டல் பணப் பரிமாற்ற வசதியாக, இலங்கை, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர், மொரீஷியஸ், பிரான்ஸ் உட்பட, 11 நாடுகளிலும், அமலாகி வருகிறது. இந்தியாவின் யுபிஐ வசதியை, உலகின் மிகப் பெரிய, நிகழ் நேர பணப் பரிமாற்ற வசதியாக, சர்வதேச செலாவணி நிதியம் அங்கீகரித்து இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------

## உணவுப் பதனீடு (10)

சிறு உணவுப் பதனீட்டு நிறுவனங்களை, முறைசார்ந்த பொருளாதார கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கான, பிரதமரின் FME திட்டத்தின் கீழ், இதுவரை, 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தனிநபர் உணவுப் பதனீட்டு நிறுவனங்கள் பயன் பெற்றுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் தெரிவித்துள்ளார். பிரதமரின் FME திட்டம் குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் அவர் பேசுகையில், திட்டப் பயனாளிகளில் 80 சதவிகிதம், முதல் தலைமுறை தொழில் முனைவோர் என்றும், 44 சதவிகிதம் பெண்கள் என்றும் கூறினார். 2020ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தினால், 20 10 லட்சம் நேரடி வேலை வாய்ப்புகள் உருவாகி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

---------------------

## தமிழ்நாடு இலவச பயணம் (10)

தமிழகத்தில் வரும் அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி முதல், சாதாரண பேருந்துகள், சொகுசு பேருந்துகள், LSS மற்றும் இடை நில்லா பேருந்துகளில், பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என, முதலமைச்சர் திரு. விஜய் அறிவித்துள்ளார். தமிழகத்தில் இன்று இதுகுறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், பள்ளி-கல்லூரி மாணவிகள், மற்றும், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இத்திட்டம அமையும் என்றும், இனி 3ஆம் பாலினத்தவருக்கும் இத்திட்டம் பொருந்தும் என்றும் கூறினார். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என தமிழக முதலமைச்சர் மேலும் கூறினார்.

----------------------

## விமான நிலையம் (9)

பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப் படுவதாக, தமிழக அரசு அறிவித்துள்ளது. முதலமைச்சர் திரு. விஜய், தமிழக சட்டமன்றத்தில் இன்று, தாமாகவே முன்வந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில், இதை அறிவித்தார். விவசாயிகள் பாதிக்கப் படுவதை தவிர்க்கும் வகையில், இவ்வாறு முடிவு செய்யப் பட்டுள்ளதாகவும், புதிய விமான நிலையத்திற்கு, மாற்ற இடம் தெரிவு செய்வது குறித்து ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார். சென்னை விமான நிலையத்தில், 5ஆவது முனையம் அமைக்கும் பணிகளில், தமிழக அரசு, இந்திய விமான நிலைய ஆணையத்துடன் இணைந்து செயல்படும் என்றும், அவர் கூறினார்.

----------------------

## கேரளம் (8)

கேரளத்தில் ஓணம் திருநாளை ஒட்டி, சுற்றுலா வாரக் கொண்டாட்டங்கள் இன்று தொடங்குகின்றன. முதலமைச்சர் திரு. சதீசன் இன்று மாலை திருவனந்தபுரத்தில் நடைபெறும் விழாவில், கொண்டாட்டங்களை தொடக்கி வைக்கிறார். சுற்றுலா வாரக் கொண்டாட்டங்களின் போது, திருவனந்தபுரத்தில் 35 இடங்களில், 340க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. கேரள மாநிலத்தின் இதர மாவட்டங்களிலும், 170க்கும் மேற்பட்ட கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

----------------------

வானிலை (16)

இன்று கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஒருசில இடங்கள், மற்றும், புதுச்சேரியில், பலத்த காற்றுடன் கூடிய, மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், காரைக்கால் பகுதியில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 30ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக , கோவை மாவட்டம் உபாசி உள்ளிட்ட இடங்களில், 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 செ.மீ மழை பெய்துள்ளது.

---------------------

## ரயில்வே (8)

இந்திய ரயில்வே கட்டமைப்பில், சிறப்பு தூய்மை இயக்கம் தொடக்கப் பட்டுள்ளது. ரயில்கள், மற்றும், ரயில் நிலையங்களில், குடிநீர் தொட்டிகளை சுத்தப்படுத்தவும், நீர் சுத்திகரிப்பு வசதிகளை பழுது நீக்கி பராமரிக்கவும், மண்டல ரயில்வே நிர்வாகங்கள் மூலம், விரிவான முறையில நடவடிக்கை எடுக்கப் படுவதாக, ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. குறிப்பாக, நிலத்தடி நீரை குடிநீர் தேவைகளுக்கு பயன்படுத்தும் இடங்களில், சுத்திகரிப்புப் பணிகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் வழங்கப்படுவதாக, அமைச்சகம் மேலும் கூறியுள்ளது.

---------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

புதுச்சேரியின் பொருளாதாரம், வலுவான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், இன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் கூறினார்.

புதுச்சேரியில், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியுடன், கோதுமை மாவு, துவரம் பருப்பு உள்ளிட்ட பொருட்கள் தொகுப்பாக வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி பட்ஜெட் உரையில் அறிவித்தார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், இன்று ஆந்திர மாநிலத்தில் முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட, உயர்ரக பாப்கார்ன் சோள விதைகளை அறிமுகப்படுத்தினார்.

இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, கேலோ இண்டியா சம்வாத் – விவாத நிகழ்ச்சி, வரும் 27ஆம் தேதி, தேசிய அளவில் நடைபெற உள்ளது.